Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மலர் - 36 இதழ் - 10 அக்டோபர் - 2023

தனிப்பிரதி
ரூ.10/-



## 26 – ம் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதி







## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| 1. ஆசிரியர் உரை | 3 |
| 2. ஆதிக் கிறிஸ்தவர்களின்... | 11 |
| 3. பெண்கள் பகுதி | 14 |
| 4. வாலிபர் பகுதி | 18 |
| 5. சிறுவர் பகுதி | 21 |
| 6. தேவனால் அழைக்கப்பட்ட... | 23 |
| 7. நாம் எங்கே உட்காரக்கூடாது | 28 |
| 8. நீ விசுவாசித்தால்... | 31 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

THIRUMARAI AASAAN
S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385
Pleading for the restoration of pure New Testament Christianity
Vol. 36 Oct - 2023 Issue - 10

ஆசிரியர் உரை

# என்னத்தைச் செலுத்துவேன் ?

**நா**ம் ஒவ்வொருவரும் நம்முடைய அன்றாட வாழ்க்கையில், ஒரே பொருளைத் தரும் வித்தியாசமான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறவர்களாகவே உள்ளோம். ஆயினும், அப்படிப்பட்ட வார்த்தைகளை, ஒருவேளை, அது ஒரே பொருளைக் கொடுக்கக் கூடியவைகளாக இருந்தாலும், அவைகளை எல்லா இடங்களிலும் ஏகமாகப் பயன்படுத்துவதில்லை. ஏனெனில், அப்படிப் பயன்படுத்துவது சூழ்நிலைக்கு பொருத்தமானதாகவோ அல்லது பொருள் பொதிந்ததாகவோ இருக்காது. உதாரணமாக, நீர், உமது மற்றும் நீங்கள், உங்களுடைய போன்ற வார்த்தைகள் ஒரே பொருளைத் தருபவைகளாக இருந்தாலும், முதல் இரண்டு வார்த்தைகளை நம்மைப் படைத்த தேவனுக்கும், அடுத்த இரண்டு வார்த்தைகளை நம்மைப் போன்ற சக மனிதர்களுக்குமே பயன்படுத்துகிறோம். இப்படி வார்த்தைகளை வகைப்படுத்தி பயன்படுத்துவதை மொழி அறிவு சம்பந்தப்பட்ட ஒன்றாக நாம் கருதாமல், படைத்தவருக்குக் காட்டும் மரியாதையாகவும், அவரிடம் நாம் கொண்டுள்ள பக்திக்கு அடையாளமாகவுமே எண்ணுகிறோம்.

நமது தலைப்பில் இடம் பெற்றுள்ள செலுத்துவேன் என்ற வார்த்தையைக் கூட நாம் இந்த அடிப்படையில் தான் பார்க்க வேண்டும். அதாவது, இச்சங்கீதக்காரனால், தேவனுக்காக விசேஷமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதென்றே பார்க்க வேண்டும். ஆம், 116-ம் சங்கீதத்தின் ஆசிரியர், தேவனிடத்திலிருந்து தான் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக, ஆசீர்வாதங்களுக்காக நன்றி சொல்ல

எண்ணினபோது, என்னத்தைக் கொடுப்பேன் என்று வழக்கமான வார்த்தைகளைக் கொண்டு சாதாரணமாகச் சொல்லாமல், மரியாதையும், பயபக்தியும் கலந்த அளவில், என்னத்தைச் செலுத்துவேன் என்றே கூறியுள்ளான். அவன் தேவனுக்காகப் பயன்படுத்திய வார்த்தைகள், அவர் யார் என்பதையும், எப்படிப்பட்ட தன்மை கொண்டவர் என்பதையும் நமக்குக் காட்டுகிறது.

இப்பொழுது, நமது வழக்கத்தின்படியாக, நமது தலைப்புக்கான பின்னணி குறித்துக் கொஞ்சம் பார்த்து, பிறகு தொடருவோம்.

150 பாடல்களைக் கொண்ட சங்கீதப் புத்தகம் அனைத்தும் தாவீது அரசனாலே பாடப்பட்டது என்று பெரும்பாலோர் பொதுவாக எண்ணினாலும், உண்மையில் அவை ஏழு ஆசிரியர்களைக் கொண்டு பாடப்பட்டுள்ளது. அவர்கள் தாவீது, ஆசாப், கோராகின் புத்திரர், சாலமோன், மோசே மற்றும் எஸ்ராயர்களாகிய ஏமான், ஏத்தான் என்பவர்கள். இந்த உண்மை தெரியாமல், சங்கீதம் என்றாலே நாம் தாவீது என்று சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது. ஆயினும், கிட்டத்தட்ட பாதி சங்கீதங்களுக்கு (73) தாவீது தான் ஆசிரியர். நமது தலைப்பு இடம் பெற்றிருக்கும் 116-ம் சங்கீதத்திற்கான ஆசிரியர் யார் என்று திட்டமாகத் தெரியாவிட்டாலும், தாவீதாகத்தான் இருக்க வேண்டுமென்று ஏறக்குறைய ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இன்னும், 150 பாடல்களைக் கொண்ட சங்கீத புத்தகத்தை நாம் ஏழு பிரிவுகளாகப் பிரிக்கலாம். **1. போதனை சங்கீதம், 2. துதி சங்கீதம், 3. நன்றி சங்கீதம், 4. புலம்பல் சங்கீதம், 5. நம்பிக்கை சங்கீதம், 6. மேசியாவைப் பற்றிய சங்கீதம், 7. ஐயோ சங்கீதம்** என்று. இவற்றில் நமது தலைப்பு இடம் பெற்றிருக்கும் 116ம் சங்கீதம், நன்றி சங்கீதத்தின் கீழ் வரக்கூடிய ஒன்று. இச்சங்கீதத்தையும், வேறு சில குறிப்பிட்ட சங்கீதங்களையும், யூதர்கள் தங்களுடைய முக்கிமான பண்டிகை காலங்களிலே பாடியுள்ளதாக பிற வரலாறும், வேதாகமும் கூறுகிறது. நம்முடயை இரட்சகர் வாழ்ந்த காலத்தில் கூட இச்சங்கீதம் பாடப்பட்டதாக நம்பப்படுகிறது. குறிப்பாக, கர்த்தரின் பந்தி ஆரம்பிக்கப்பட்டபோது, ஆண்டவர் இயேசுவாலும், அவருடைய சீடர்களாலும் பாடப்பட்ட பாடல், இவைகளுள் ஒன்று என்று தான் நம்பப்படுகிறது (மத்தேயு 26:30).

இந்த 116 - ம் சங்கீதத்தின் மொழிநடையையும், குறிப்பாக கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன் என்ற வசனங்களடங்கிய

பகுதியையும், அதிலுள்ள வார்த்தைகளையும், அவைகளுக்கான அர்த்தங்களையும் நாம் கவனித்தால், இதன் ஆசிரியர் ஒரு மிகப்பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டதினிமித்தம் தேவாதி தேவனுக்கு நன்றி சொல்லிப் பாடியுள்ளார் என்று தெரிந்து கொள்ளலாம். இப்படி, ஆபத்திலிருந்து தன்னை விடுவித்த தேவனுக்கு, எப்படி நன்றி சொல்லுவதென்று தெரியாமல் தடுமாறி, தனக்குத்தானே, தன் இருதயத்தோடு பேசியுள்ளான் என்பதையும் காணமுடியும்.

சரி, இப்பொழுது, சிறப்புமிக்க இச்சங்கீதத்தின் வசனங்களிலிருந்து, நமக்கு என்னென்ன பாடங்கள் கிடைக்கிறதென்று பார்த்துப் பயனடைவோம்.

## I. கர்த்தர் நன்மைகளைச் செய்பவர் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் (வசனம் - 12 )

சங்கீதம் 116:12-13 வசனப்பகுதியிலிருந்து நமக்குக் கிடைக்கும் முதலாவது பாடம், கர்த்தர் நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் உபகாரங்களைச் செய்கிறவராயிருக்கிறார் என்பது.

இச்சங்கீதக்காரன், வசனம் 12 – ல், கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காவும் என்று சொல்வதின் மூலம் தன் வாழ்வில் பெற்றுக்கொண்ட எல்லா நன்மைகளுக்கும் காரணம் தேவாதி தேவன் தான் என்பதை முற்றும் முடிய ஒத்துக்கொள்கிறான். இதே கருத்தை புதிய ஏற்பாட்டில் யாக்கோபு ஆசிரியரும் கூறியுள்ளார். **நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும், யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை** என்று (யாக்கோபு 1:17). ஆனால், இவ்வழகிய கருத்து பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே இச்சங்கீதக்காரனுக்குப் புரிந்துள்ளது.

ஆனால், ஆவியானவரின் துணை கொண்டு இச்சங்கீதக்காரனால் முன்மொழியப்பட்டு, அதே ஆவியானவரால் யாக்கோபு ஆசிரியரால் வழிமொழியப்பட்டிருக்கும் இவ்வேதாகம உண்மையை நம்மில் எத்தனை பேர் அப்படியே ஏற்றுச் செயல்படுகிறவர்களாக உள்ளோம்? சொல்லுங்கள் பார்க்கலாம்! என்னுடைய வாழ்க்கையில் நான் பெற்று அனுபவிக்கிற நன்மைகள் அனைத்தும் எனக்குக் கர்த்தரால் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று நம்மில் எத்தனை பேர் நினைக்கிறோம்?

என் உழைப்பின் பலனாக இந்த உயர்வு வந்தது என்றும், என்னுடைய முயற்சியின் விளைவாக கிடைத்தது என்றும், என்னுடைய செல்வாக்கின் காரணமாக அக்காரியம் கைகூடிற்று என்றும் தானே சொல்லுகிறோம். இன்னும், என்னுடைய அதிர்ஷ்டத்தினால் இந்த யோகம் அடித்தது என்று தானே பீற்றுகிறோம். அப்படித்தானே! ஆனால், இச்சங்கீதக்காரனோ, கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்கள் என்று கூறுகிறார். ஆம், ஒருவேளை அவை பெரியதாக இருந்தாலும், சிறியதாக இருந்தாலும், கர்த்தர் தனக்குச் செய்ததாகவே எண்ணியுள்ளான். பக்தன் யோபு கூறுவது போல், கர்த்தர் கொடுத்தார் ( யோபு 1:21 ) என்றல்லவா எண்ணியிருக்கிறான். நம்மில் எத்தனை பேர் தேவனிடத்தில் நாம் பெற்று அனுபவிக்கிற நன்மைகளுளக்காக இப்படிச் சொல்லுவதற்குத் தயாராக இருக்கிறோம்? சொல்லுங்கள்.

அன்பானவர்களே ! நம் வாழ்வில் கர்த்தர் செய்த நன்மைகளை ஒவ்வொன்றாக எண்ணிப்பாருங்கள். நாம் வாழ்வதற்குத் தேவையான பல காரியங்கள் இலவசமாகவும், சொற்ப முயற்சியாலும் கிடைப்பதால், கர்த்தர் நமக்குச் செய்யும் மேன்மைகளை நாம் யாரும் அவ்வளவாக உணருவதில்லை. உதாரணமாக, நாம் சுவாசிக்கும் காற்று, நாம் வாழ்வதற்குத் தேவையான சூரிய ஒளி, நாம் குடிப்பதற்குத் தேவையான தண்ணீரைத் தரும் மழை போன்ற இவைகளுக்காக நாம் ஒவ்வொருவரும் எவ்வளவு பணம் மாதந்தோறும் செலவிடுகிறோம்? இன்னும், தேவன் நமக்குக் கொடுக்கும் பெலனைக் கொண்டு உழைத்துப் பெற்றுக்கொள்ளும் உணவு, உடை, இருப்பிடம் போன்றவைகளுக்காக நாம் தேவனுக்கு என்ன கைம்மாறு செய்கிறோம்? தேவன் நம்முடைய வாழ்வில் செய்யும் நன்மைகளுக்கு நாம் நன்றியுடையவர்களாய் இருக்க வேண்டுமென்றே எதிர்பார்க்கிறார். பத்து குஷ்டரோகிகளை குணமாக்கின இயேசு, ஒருவன் மாத்திரம் திரும்பி வந்த போது, மற்ற ஒன்பது பேர் எங்கே என்று கேட்டது உங்களுக்கு மறந்து போய்விட்டதா ? (லூக். 17:17).

இங்கே, தேவன் மனிதனுக்குச் செய்திருக்கும் நன்மைகளில் மிகப்பெரிய நன்மையை என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியாது. யோவான் 3:16 –ம் வசனம் சொல்லுவதைக் கவனியுங்கள். தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படி அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். ஒரு வேளை, அவர் நம் வாழ்வில் செய்த மற்ற நன்மைகளை நாம் மறக்கிறவர்களாக

இருந்தாலும், தம்முடைய ஒரே பேறான குமாரனை நமக்குத் தந்த நன்மையை யாராவது மறக்கலாமா? நிச்சயமாக மறக்கக்கூடாது. குமாரனாகிய இயேசுவுக்கும், அவரை அனுப்பின தேவனுக்கும் நாம் என்றென்றும் நன்றியுடையவர்களாகவும், உண்மையுடையவர்களாகவும் இருப்பது இப்பூமியில் பிறந்து வாழும் ஒவ்வொருவரின் கடமை. இதை நாம் யாரும் மறந்துவிடக்கூடாது.

## II. அவருக்கு எதையாவது செலுத்த வேண்டும் ( வசனம் -12 )

சங்கீதம் 116 : 12-13 வசனங்களிலிருந்து நமக்குக் கிடைக்கும் இரண்டாவது பாடம். அவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் நன்மைகளுக்காக நாம் எதையாகிலும் செலுத்தவேண்டுமென்பது.

சர்வ வல்ல தேவனிடத்திலிருந்து பெரிய அளவில் நன்மைகளைப் பெற்றுக்கொண்ட இச்சங்கீதக்காரன், நம்மில் அநேகரைப்போல் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு போகிறபோக்கில் ஒரு நன்றி சொன்னால் போதுமென்று எண்ணாமல், பெற்றுக்கொண்டவைகளுக்கு ஈடாக அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்? என்று எண்ணி மலைத்துள்ளான்!

என்னத்தைச் செலுத்துவேன்! என்று இவன் மலைத்து நின்று சொன்னது, இவன் மனநிலை பற்றி நமக்கு இரண்டு காரியங்களைச் சொல்லுகிறது. முதலாவது, பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு ஈடாகச் செலுத்துவதற்கு என்னிடத்தில் ஒன்றுமே இல்லை என்று குமுறுவது. இரண்டாவது, பெற்றுக்கொண்ட நன்மைகளுக்குப் பதிலாக என்னிடத்தில் இருப்பதில் எதைச் செலுத்தினால் கொஞ்சமாகிலும் கிட்ட நெருங்கும் என்று எண்ணித் தவிப்பது.

தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்பவைகளுக்கு ஈடாக, நாம் எதையும் ஒருபோதும் செய்துவிட முடியாது என்பது உண்மையே. ஆனாலும், நான் பெற்று அனுபவிப்பவைகளுக்காக, எதையாகிலும் செலுத்த வேண்டுமென்ற எண்ணமுடையவர்களாக இருப்பது மிகமிக அவசியம்.

அப்போஸ்தலனாகிய பவுலைப் பாருங்கள். தன்னுடைய பழைய வாழ்க்கை பற்றிக் கூறும்போது, முன்னே நான் தூஷிக்கிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன் என்று கூறுகிறான் (1தீமோ. 1:13). அப்படிப்பட்ட பவுலை, கிறிஸ்து, அவன் தமஸ்கு செல்லும் வழியில் சந்தித்துப் பிடித்தார் (அப்.9:3-6). அவன் அனனியாவால் உபதேசிக்கப்பட்டு பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம்

பெற்றுக்கொண்டான் (அப்.22:16 ). பிறகு, இந்தப் பவுல், பிலிப்பி பட்டணத்து சபையாருக்கு நிருபம் எழுதும்போது, நான் அடைந்தாயிற்று அல்லது முற்றிலும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன் பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடுகிறேன்.... ( பிலி. 3 :12, 13 ) என்று கூறுகிறான். ஆம், தன்னைச் சந்தித்த இயேசுவுக்காக, தான் இரட்சிக்கப்பட்ட நற்செய்தியை நல்கிய இயேசுவுக்காக, எந்தளவு நன்றியுடைவனாயிருந்து தன் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளான் என்று பாருங்கள். இன்னும், கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் (பிலி. 1 : 21) என்று சொல்லும் அளவுக்கு தன் நன்றியை கிரியைகளினால் காட்டியுள்ளான் என்பதையும் கவனிக்கத் தவறி விடாதீர்கள்.

அருமையானவர்களே! நாம் பார்க்கும் இந்தப் பழைய ஏற்பாட்டு சங்கீதக்காரன் போலவும், நம்முடைய புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலன் பவுல் போலவும் நாம் தேவனுக்காக, கிறிஸ்துவுக்காக, அவர்களிடத்திலிருந்து நாம் பெற்றுக்கொண்ட சரீர நன்மைகளுக்காக மற்றும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக எதையாகிலும் செலுத்த வேண்டுமென்ற எண்ணமுடையவர்களாக இருக்கிறோமா? ஒருவேளை, இதுகாறும் அப்படிப்பட்ட எண்ணமில்லாதவர்களாக இருந்திருப்போமானால், சரி, போகட்டும், இனிமேலாகிலும், தேவனுக்குச் செலுத்த வேண்டியவைகளைச் செலுத்துகிறவர்களாக இருப்போம். நம்முடைய இரட்சகர், இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்று நமக்குச் சொல்லியுள்ளதை நாம் கண்டிப்பாக மறக்கக்கூடாது (மத்தேயு 22:21).

### III. இரட்சிப்பின் பாத்திரம் எடுத்துக்கொள்ள வேண்டும் (வசனம்- 13)

சங்கீதம் 116 : 12-13 வசனப்பகுதியிலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு முக்கியமான பாடம், இரட்சிப்பின் பாத்திரம் எடுத்தக்கொள்ள வேண்டும் என்பது.

கர்த்தர் செய்த உபகாரங்கள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக எண்ணி, அதற்கு நன்றியாக எதைச் செலுத்தினால் சரியாக இருக்குமென்று மூளையை கசக்கிப் பிழிந்து, எதையும் முடியாத நிலையில் எப்படியோ ஒரு தீர்மானத்திற்கு வந்து சேர்ந்தான் நம் சங்கீதக்காரன். அந்த அரிய தீர்மானம் தான், இரட்சிப்பின் பாத்திரம் எடுத்துக்கொள்வேன் என்பது. ஆஹா! எப்படிப்பட்ட ஒரு தீர்மானம்! வேறு என்ன தீர்மானம் எடுத்திருந்தாலும் இதற்கு ஈடாகுமா அல்லது இணைதான் ஆகுமா? முடியவே முடியாது. சங்கீதகாரனே, சபாஷ்! சரி, இவன் மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தவனாதலால், இரட்சிப்பின் பாத்திரம் என்பது, அன்றைய கால கட்டத்தில் பிரமாணங்களினடிப் படையில் தேவன் கட்டளையிட்டிருக்கும் அல்லது எதிர்பார்க்கும் மார்க்க

கடமைகளைச் செய்ய தன்னை ஒப்புக்கொடுப்பது தான். ஆம், இச்சங்கீதக்காரன், பொன்னைக் கொடுக்கலாமா, பொருளைக் கொடுக்கலாமா, இதைக் கொடுக்கலாமா, அதைக் கொடுக்கலாமா என்று குழம்பிப்போய், இறுதியில் தனக்கிருக்கும் ஒரே இரட்சிப்பின் பாத்திரம் என்று கண்டு கொண்டான்.

தான் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக இந்தப் பழைய ஏற்பாட்டு பக்தன், இரட்சிப்பின் பாத்திரம் எடுப்பேன் என்று தீர்மானித்து வாழ்ந்திருக்கும் போது, புதிய ஏற்பாட்டின் கீழாக வாழ்ந்து, அவனைக் காட்டிலும் மிக அதிகமான ஆவிக்குரிய நன்மைகளைப் பெற்று அனுபவிக்கும் சிலாக்கியமுள்ள நாம், இரட்சிப்பின் பாத்திரம் எடுத்தவர்களாக நம்முடைய வாழ்க்கையை நடத்துவது எவ்வளவு அவசியம் என்று எண்ணிப்பாருங்கள். இச்சங்கீதத்தின் ஆசிரியர், தாவீது என்று நம்பப்படுவதாலும், அவன் ஒரு அரசனாக இருந்தானென்பது உண்மையாக இருப்பதாலும், அவனுக்கு முன்பாக வேறு பல பாத்திரங்களும் நிச்சயமாக இருந்திருக்கும். அதாவது, உலக இன்பம் என்ற பாத்திரம், சர்வாதிகாரம் என்ற பாத்திரம் என்று பலபாத்திரங்கள் இருந்திருக்கும். ஆனால், இவனோ, பெத்தானியா கிராமத்து மரியாள் போல, தேவையானது ஒன்றே என்று தீர்மானித்து (லூக்கா 10:42) இரட்சிப்பின் பாத்திரம் எடுத்துக்கொண்டான்.

அருமையானவர்களே! நம்மில் எத்தனைபேர் இந்த இரட்சிப்பின் பாத்திரம் எடுத்து வாழத் தயாராக இருக்கிறோம்? இந்த இரட்சிப்பின் பாத்திரத்தை நாம் ஒவ்வொருவரும் எடுக்க வேண்டுமென்பது தேவசித்தமாக இருக்கிறது (1தீமோத். 2:4 ). மேலும், எபிரெயர் ஆசிரியர், இந்த இரட்சிப்பின் பாத்திரத்தை நாம் எடுக்காவிட்டால் தண்டனைக்குத் தப்பமுடியாது என்று நம்மைக் கடுமையாக எச்சரிக்கிறார். ஏனெனில், தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான எந்தச் செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரத்தக்கதாக அவர்களுடைய வசனம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க, முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம் (எபி.2:2-4) என்று.

எப்படி இந்த சங்கீதக்காரனை, கடுமையான சரீரச் சூழ்நிலையிலிருந்து தேவன் விடுவித்தாரோ, அதுபோலவே, நம் ஒவ்வொருவரையும் பாவத்தின் கோரப்பிடியிலிருந்து விடுவிக்கப்படும்படியான சகல காரியங்களையும் நமக்குக் கூட்டி வழங்கியுள்ளார். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய

தேவத்துவத்துள் உள்ள மூவரும், நாம் இரட்சிக்கப்படும்படி தங்கள் பங்கை செய்துள்ளனர். ஆம், பிதாவாகிய தேவன் தமது ஒரே பேரான குமாரனை நமக்காகத் தந்துள்ளார் (யோவான் 3:16) குமாரனாகிய கிறிஸ்து தன்னுடைய உயிரையே நமக்குத் தந்துள்ளார் (எபே.5:2) பரிசுத்த ஆவியானவர் வேதவசனங்களை நமக்குக் கொடுத்துள்ளார் (யோவான் 14:26, 16:13 ) அப்படியானால், இதற்குக் கைமாறாக, நாம் இரட்சிப்பின் பாத்திரம் எடுக்க வேண்டியது அவசியமா, இல்லையா? நீங்களே சொல்லுங்கள். சரீர நன்மைகளைப் பெற்ற சங்கீதக்காரனுக்கே அது அவசியமானால், சரீர நன்மைகளையும், ஆவிக்குரிய நன்மைகளையும் ஒருங்கே பெற்ற நமக்கு அது எவ்வளவு அவசியம் என்று தயை கூர்ந்து சிந்தித்துப் பாருங்கள்.

இதை வாசிக்கும் அருமையான நண்பரே, ஒருவேளை, உங்களில் யாராவது, கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசப்படி இரட்சிப்பின் பாத்திரம் எடுக்காதவர்களாக இருந்தால், உடனடியாக நீங்கள் இரட்சிப்பின் பாத்திரம் எடுக்கும்படி உங்களை ஊக்கப்படுத்துகிறேன். இதோ, இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள் என்றே, தேவன் பவுலடியாரைக் கொண்டு சொல்லியுள்ளார் (2கொரி. 6:2). ஆகவே, நாம் காலம் தாழ்த்தக் கூடாது. அப்படித் தாழ்த்துவது தேவ ஆலோசனைக்கு விரோதமானது.

ஒருவேளை, இரட்சிப்பின் பாத்திரத்தை நான் ஏற்கனவே எடுத்துவிட்டேன் என்று நீங்கள் சொல்கிறவர்களாக இருந்தால், உங்களுக்கு ஒன்றை நினைவுபடுத்துகிறேன். நீங்கள் எடுத்திருக்கும் பாத்திரம், இயேசுவால் கொடுக்கப்பட்ட புதிய ஏற்பாடு உபதேசங்களின்படி சரியாக இருக்கிறதா என்று சோதித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில், நம்முடைய இறுதி நியாயந்தீர்ப்பு வசனத்தினடிப்படையில் தான் இருக்கப்போகிறது. இயேசு ஆண்டவர் நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் (யோவான் 12:48) என்று கூறியுள்ளார். ஆகையால், நம்முடைய இரட்சிப்பு விசுவாசித்துப் பெற்றதாக (மாற்கு16:16) பாவ வாழ்க்கையிலிருந்து மனந்திரும்பிப் பெற்றதாக (அப்.2:38) இயேசு தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டுப் பெற்றதாக (அப். 8:37 ) பாவமன்னிப்புக்காக தண்ணீரில் மூழ்கிப் பெற்றதாக (அப்.22:16) இருக்க வேண்டும். இதற்கு மாறான எந்தவொரு உபதேசமும், எப்படிப்பட்ட அனுபவமும் புதிய ஏற்பாட்டு உபதேசப்படியான இரட்சிப்பாக இருக்க முடியாது.

அன்பானவர்களே! தேவனிடத்திலிருந்து நாம் பெற்றுக் கொண்டவைகளுக்குப் பதிலாக ஒன்றைச் செலுத்துவதற்கு இரட்சிப்பைக் காட்டிலும் சிறந்தது வேறெதுவுமில்லை. இரட்சிப்படைந்து, கர்த்தரால், அவருடைய சபையில் சேர்க்கப்பட்டு (அப். 2:47). நித்திய வாழ்விற்கான உத்திரவாதம் பெறுங்கள். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

# ஆதிக் கிறிஸ்தவர்களின் ஆராதனை

**J.C. சோட்**

**( சென்ற மாத இதழின் தொடர்ச்சி... )**

7. கர்த்தருடைய மக்கள் பிறரிடம் பாவங்களை அறிக்கையிட வேண்டியதில்லை. ஆனால், பவுல் கூறுவதைப்போல ஒவ்வொருவரும் தன்னைத் தானே சோதித்தறிந்து பின்னர் பந்தியில் கலந்து கொள்ள வேண்டும். தேவன் இருதயத்தை அறியக்கூடியவராக இருக்கிறார். ஆனால், சபை அங்கத்தினர்களாகிய நாம் அறியோம். எனவே, ஒரு மனிதனை தீர்ப்புச் சொல்ல நமக்கு உரிமை இல்லை. ஆனால், வேதாகம உபதேசத்தின் வெளிச்சத்தில் தனிப்பட்ட ஒவ்வொருவனும் தன்னைத்தானே சோதித்தறிய வேண்டியது அவனுடைய கடமை.

அத்தோடு (1 கொரிந்தியர் 11–ம் அதிகாரத்தில், கர்த்தரின் பந்தியை ஒரு விருந்து போலாக்கி அதை கேலிப் பொருளாக்கிய கொரிந்தியர்களை பவுல் கண்டிக்கிறார். உண்டு குடிக்க அவர்களுக்கு வீடுகள் உண்டென்றும், ஆராதனையில் கலந்து கொள்ள வருவது தங்கள் சரீரப் பசியைப் போக்க உண்ணவும் குடிக்கவும் அல்ல என்றும், அவர்களுக்கு அவர் சுட்டிக்காட்டு கிறார். இன்றும் இது பொருந்துகிறது. பக்தி வைராக்கியத்துடன் கிறிஸ்தவர்கள் ஆராதனையில் பங்கு கொள்ள வேண்டும். அப்பத்திலும், இரசத்திலும் அவர்கள் பங்குகொள்ளும்போது கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் நினைவு கூருவதைத் தவிர, வேறு சிந்தனை கூடாது.

பின்னர், 1 கொரிந்தியர் 16:1,2 வசனங்களை நாம் காணும்போது, கொடுத்தல் என்ற பொருள் பற்றி அதே எழுத்தர் கூறுவதைக் காணலாம். அவர் எழுதுகிறார்: ‘பரிசுத்தவான் களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப் பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும்போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும், தன் தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன். ‘மீண்டும், அவர் எழுதுகிறார் : ‘பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாய மாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன்;

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.' (2 கொரி. 9:6, 7). எனவே, இந்தப் பிரகாரமாக, கர்த்தருடைய பிள்ளைகள் நிச்சயமாகக் கொடுக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. நாம் கீழ்க்கண்டவற்றைக் கற்றுக் கொள்ளுகிறோம்.

1. வாரத்தின் முதல் நாளிலே அவர்கள் அதைச் செய்ய வேண்டியிருந்தது.

2. எல்லா கிறிஸ்தவர்களும் கொடுக்க வேண்டும்.

3. என்ன கொடுக்க வேண்டுமென நியமித்திருக்கின்றாரோ அப்படிக் கொடுக்க வேண்டும்.

4. அவர்களுக்கு எப்படிக் கொடுக்கப்பட்டுள்ளதோ அதற்குத்தக்கதாக அவர்கள் காணிக்கை கொடுக்க வேண்டும். புதிய ஏற்பாட்டில் பத்தில் ஒரு பங்கு என்றோ. அல்லது இவ்வளவு கொடுக்க வேண்டுமென நியமனம் செய்யவோ இல்லை.

5. தங்கள் மனதிலே முன்பே தீர்மானம் செய்தபடியே அவர்கள் கொடுக்கக்கடவர்.

6. விசனமாகவோ, கட்டாயமாகக் கொடுக்க வேண்டியிருக்கிறதே என்ற எண்ணத்தோடோ அவர்கள் கொடுக்க வேண்டியதில்லை.

7. மாறாக, உற்சாகமாகக் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாக இருக்கிறபடியால், அவர்கள் உற்சாகமாகக் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப் பட்டனர்.

பாடுவதைக் குறித்து புதிய ஏற்பாட்டில் பல குறிப்புகள் உள்ளன. பவுலும், சீலாவும் சிறையிலே தேவனைத் துதித்துப் பாடினார்கள் என்பது அவற்றில் ஒன்று. (அப். 16:25). ஆனால், கர்த்தரின் பிள்ளைகளைக் கொண்ட ஒரு பிராந்திய சபை வாரத்தின் முதல் நாளிலே பாடுவதற்காகக் கூடினார்கள் என ஒரு உதாரணத்தையும் பார்க்க முடியவில்லை. இருந்தும், ஏவப்பட்டு எழுதியவர்கள் கிறிஸ்தவர்களைப் பாட வேண்டுமென கட்டளையிட்டனர். (எபே.5:19; கொலோ.3:16). எனவே, முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் கடைப்பிடித்த ஆராதனை முறையில் அதுவும் ஒன்றாக இருந்தது.

இப்போது, இவை அனைத்தையும் சேர்த்துப் பார்க்கும் போது : கர்த்தரின் பிள்ளைகள் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் (ஞாயிற்றுக்கிழமை) கூடி ஜெபித்தனர்; கற்றுக் கொண்டனர்; பாடினர்; கர்த்தரின் பந்தியில் கலந்து கொண்டனர்; கொடுத்தனர்; என்று நாம் காண்கிறோம். வேறு எதைப் பற்றியும் நாம் படிக்கவில்லை. இதுகாறும் பாதுகாக்கப்பட்டு வந்துள்ள உலகப்பூர்வமான பல எழுத்துக்களும் இதே மாதிரியைத்தான் கூறுகின்றன. எனவே, அந்தக் காலத்தில் கிறிஸ்தவர்கள் கர்த்தரை ஆராதிக்க என்ன செய்தார்கள் என நமக்குத் தெரிகிறது. நாம் அது போலவே செய்ய வேண்டாமா?

## பரிசேயரின் ஏழு பிரிவுகள்

1. சீகேம் பரிசேயர்
2. இடறி விழுகின்ற பரிசேயர்
3. விசாரப்படுகிற பரிசேயர்
4. கவசம் அணிகின்ற பரிசேயர்
5. இரத்தம் சிந்துகிற பரிசேயர்
6. பயப்படுகிற பரிசேயர்
7. அன்பு கூருகின்ற பரிசேயர்

பெண்கள் பகுதி

# " தேவனுடைய வார்த்தை "

சகோ. ரேச்சல் இராஜநாயகம்

அருமையான சகோதரிகளே! கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே உங்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிறிஸ்தவர்களாகிய நமக்குக் கிடைத்த மகா பெரிய சிலாக்கியம் தேவனுடைய வார்த்தை. அந்த வார்த்தைகள் மூலமாகத்தான் இன்றைக்கு உலகம் தேவனையும், அவருடைய ஒரே திருமைந்தன் இயேசுவையும் அறிந்து கொள்கிறது. ஒன்றான மெய் சபையை கட்டுவேன் என்று மத்.16:18 – ல் இயேசு வாக்குரைத்திருக்கிறார். மேலும், " ... மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்பட வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெல னால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார் லூக்கா (24:47–49).

அவ்வண்ணமே எருசலேமில் காத்திருந்தார்கள். பரிசுத்த ஆவி அவர்கள்மேல் வந்தமர்ந்தபோது ( அப். 2:1–4 ) வாக்குத்தத்தம் நிறைவேறியது. அவர்கள் பிரசங்கிக்கத் தொடங்கினார்கள். தேவனுடைய முழுமையான மீட்பிற்கான திட்டம் மனுக்குலத்துக்கு பிரஸ்தாபப்படுத்தப்பட்டது. முதல் முறையாக சத்தியம் பிரசங்கிக்கப்பட்ட போது ( அப். 2:37,38 ) மூவாராயிரம் பேர் அழியாத தேவனுடைய இராஜ்ஜியமாகிய சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். ஆக, அருமையான சகோதரிகளே, தேவனுடைய வார்த்தையாகிய சத்தியம் நம் கையில் உள்ளது. இந்த சத்தியமாகிய வசனத்தை வைத்துக் கொண்டு நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? **சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்** என்று யோவான் 8:32– ல் சொல்லியிருக்கிறார். சத்தியம் ஒன்றுதான். அதில் எந்த மாற்றமும் இல்லை. உதாரணமாக, ஒருவருடைய பிறந்த வருடம், தேதி இவைகளை கேட்டால் திட்டமாக சொல்ல முடியும். அதில் எந்த ஒரு மாற்றமும் செய்யமுடியாது. அவைகள் மாறவும் மாறாது. இது உண்மை. அதே சமயம் ஒரு கொலையை செய்து விட்டார் அல்லது கொலை செய்ய முயற்சி செய்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர் என்ன செய்தார் என்பது அவருக்கு மட்டும்தான் தெரியும்.

நீதிபதிகளோ, வக்கீல்களோ பல வாரங்களோ, மாதங்களோ, செலவழிப்பார்களே தவிர உண்மை இது தான்என்று கண்டுபிடிக்கமுடியாது. குற்றவாளியா? நிரபராதியா என்று தீர்ப்பது மிகவும் கடினமாய்ப் போய் விடுகிறது. ஆனால், நடந்த உண்மை அங்கேயே தான் இருக்கிறது. அது மாறாது, நிலையாக இருக்கிறது. உண்மையைத் தேடியும் அவர்களால் கண்டுபிடிக்க முடியாததற்குக் காரணம், உண்மை அவ்வப்போது மாறினதால் அல்ல மாறாக, அவர்களுடைய குறைந்த அறிவுதான் அதற்குக் காரணம். ஆவிக்குரிய நிலையிலும் இதுதான் உண்மை. மூன்று காலங்களில் தேவன் செயல்பட்டிருந்தாலும் உண்மை என்பது சத்தியம் என்பது ஒன்றுதான். மனிதர்களாகிய நாம் குறைந்தவர்கள். மோசே காலத்தில் கொடுத்த பிரமாணங்களை இயேசு நிறைவேற்றி, புதிய பிரமாணத்தை நிலைநிறுத்தினர். அவ்வளவுதான். காலம் மாறினதே தவிர உண்மை ஒன்றுதான். அதாவது சத்தியம் ஒன்றுதான்.

எல்லாத் துறைகளிலுமே உண்மை என்று பார்க்கும்போது அது மிகவும் குறுகினதுதான். கணக்குப் பாடத்தில் பெருக்கல் வாய்ப்பாடு படிக்கும் போது இரண்டையும் பெருக்கினால் ஐந்து என்று ஒருவர் சொல்லலாம். ஆசிரியர் கட்டாயமாக அது தவறு என்று கூறி சரியான விடை ஏதாவது ஒன்றாகத்தான் இருக்கும் என்பார். ஏன்? உண்மை குறுகினது நிறைய பதில்கள் இருக்கலாம். ஆனால், சரியான பதில் ஒன்றுதான். மத உலகிலும் இது இன்றைக்கு மிகவும் காணப்படுகிறது. எதை விசுவாசித்தால் என்ன? அதில் என்ன பெரிய வேறுபாடு வந்துவிடப் போகிறது என்கிறார்கள்.

இயேசு கிறிஸ்து சொல்கிறார் வசனமே சத்தியம் ( யோவான் 17:17 ) என்று. ஆவிக்குரிய உண்மைகளைக் கண்டுபிடிக்கத் தேவனுடைய வார்த்தையைத் தவிர வேறு ஆதாரங்கள் எதுவுமில்லை. சத்தியம் எது என்று தொடர்ந்து தேடிக் கொண்டே இருக்கவேண்டும். சத்தியம் எங்கும் தொலைந்து போகவில்லை, நாம் தான் எப்படி நீதிபதிகளும், வக்கீல்களும் உண்மைக் காக பல ஆதாரங்களைத் தேடுகிறார்களோ, அதுபோல ஒவ்வொரு விஷயத்திலும் தேவ சித்தம் என்ன என்பதைத் தேட வேண்டும். “ தேவனுடைய வார்த்தை தான் உண்மை ”.

சகோதரிகளே! கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் நாம் இந்த தேவனுடைய வார்த்தையைப் போதிக்க வேண்டும். தனிப்பட்ட முறையிலே ஒரு சிறந்த ஆசிரியராக இருந்து போதித்ததற்கு சகோதரி பிரிஸ்கில்லாவை மிகச் சிறந்த உதாரணமாகக் கூறலாம். பிரதான கட்டளையானது

அனைத்து கிறிஸ்தவர்களுடனும் சம்பந்தப்பட்டது. ஆகவே, உலகத்தை சத்தியத்தால் நிரப்புவது நம்முடைய பொறுப்பு (மத்:28:18-20). ஏறத்தாழ அனைத்துக் கிறிஸ்தவர்களும் இதை அறிந்திருந்தாலும் மிகச் சிலரே இதற்குக் கீழ்ப்படிகிறார்கள். பிறருக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் நமக்குள் நம்மை உந்திக் கொண்டேயிருக்க வேண்டும்.

உலகத்திலேயே மிகவும் வல்லமையான ஆயுதம் தேவனுடைய வார்த்தைதான். உலகை உண்டாக்கினதும், கொந்தளித்த கடலை அமர்த்தியதும், தண்ணீரைத் திராட்சை இரசமாக மாற்றியதும் வார்த்தைதான். ஆத்துமாவை இரட்சிப்பதும், சமுதாயத்தை மாற்றியமைப்பதும், மனுக்குலத்தை மீட்டெடுப்பதும், ஒருவரின் வாழ்க்கைக்கு அர்த்தம் கொடுப்பதும் தேவனின் வார்த்தைகள் தான். இயேசுவை கொலை செய்தவர்களின் மனது குத்தப்பட்டு வாழ்க்கையை அப்படியே தலைகீழாக மாற்றியது வல்லமையான தேவனுடைய வார்த்தைகள் தான்.

தேவனுடைய வார்த்தையைப் போதிப்பது உலகிலேயே வைத்து மிக முக்கியமான வேலை. தேவனுக்கு ஒரே ஒரு குமாரன் இருந்தார். தெய்வீக உண்மைகளைப் போதிக்கும் ஓர் ஆசானாக தன் குமாரன் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்பினார்.

இந்த உலகமானது திக்குத் தெரியாமல் வாழ்கின்ற மக்களையும், வழிநடத்துவாரும், ஆலோசனை சொல்வாரும் இல்லாமல், குணப்படுத்த இயலாத நிலையில் நம்பிக்கையற்று வாழ்பவர்களையும் கொண்டுள்ளது. இதற்குத் தீர்வு தேவன்தான். ஆனால், நாம் நடுவில் இருந்து அவர்கள் இருதயத்துக்குள் வார்த்தைகளைக் கொண்டு செல்ல உதவ வேண்டும். ஏசாயா தீர்க்கதரிசி, " **கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார். சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங் கட்டுதலையும், சிறைபட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர் களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும், நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும், சீயோனிலே துயரப் பட்டவர்களைச் சீர்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார். அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்** " (ஏசாயா 61:1-3).

நம் நாட்டிலே வேதாகமம் எண்ணிக்கையில் நிறைய இருந்தாலும் அதைச் சொல்லுகிறவர்கள் இல்லாவிட்டால் அதைக் கேட்காமலேயே மடிந்து போகிறவர்கள் அநேகர். ஆத்துமா முக்கியம் என்பதை நாம் உணர வேண்டும். ஒரு மனிதனின் உடைமைகளில் மிக முக்கியமானது அவன் ஆத்துமாதான். இரண்டு பொருள்கள் இந்த உலகத்திலும், நித்தியத்திலும் அழியாது. அவை, தேவனுடைய வார்த்தையும், மனிதனுடைய ஆத்துமாவும் தான். ஆக, இன்றைக்கு மிகவும் அவசரமாகச் செய்யப்பட வேண்டிய வேலை மனிதனுடைய ஆத்துமாவை தேவனுடைய வார்த்தையோடு ஒன்றாக இணைப்பதுதான்.

அருமையானவர்களே! ஆத்தும ஆதாயம் என்பது மிக முக்கியம். அதற்குத் தியாகம் தேவைப்படுகிறது. சமயங்களில் கண்ணீரும் சிந்தவேண்டியுள்ளது. காலம் குறுகினதாய் இருக்கிறது. நியாயத்தீர்ப்பு நிச்சயம். “ **அறுப்புக்காலம் சென்றது, கோடைக் காலமும் முடிந்தது, நாமோ இரட்சிக்கப்படவில்லை** ” ( எரே 8:20 ) என்று சோகமாகக் கூறுவோமா? இல்லை, அருமையான சகோதரிகளே, தேவனுடைய வார்த்தைகளை அற்பமாய் எண்ணாமல் உற்சாகமாய் செயல்படுவோம்.

## வேத வாக்கியங்களின் வழிநடத்துதல்

- ஜீவனளித்து, தேவனுடைய பிள்ளையாக மாற்றுகிறது.
- பாவம் செய்யாதபடி நம்மைக் காக்கிறது.
- புத்துணர்வையும், நம்பிக்கையையும் தருகிறது.
- நன்றியுணர்வைத் தருகிறது.
- உற்சாகத்தையும், ஊக்கத்தையும் தருகிறது.
- தேவனுக்கு பயப்படும்போது ஞானத்தைத் தருகிறது.
- நம் வழிகளைச் சுத்தப்படுத்துகிறது.

வாலிபர் பகுதி

# இக்கட்டான நேரங்களில்....

**Dr. ஏபில் நாயகம்**

இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் உங்கள் யாவருக்கும் வாழ்த்துக்கள். ரோமர் 15 – ம் அதிகாரம் 4ம் வசனம் இப்படியாக சொல்கிறது. **தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ள வர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது என்று** நம் அனுதின வாழ்வில் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் போதும், நாம் நினைத்ததற்கு மாறான ஒரு காரியம் நிகழும் போதும் நாம் சோர்வடைவதும், துவண்டு போவதும் உண்டு. சில சமயம் தேவன் மீது நாம் வைத்திருக்கும் விசுவாசத்தையே தளர்வடையச் செய்யும் அளவிற்கு நாம் சோர்வடைந்து விடுவதும் உண்டு. அப்படிப்பட்ட நேரங்களில் **ஏன் எனக்கு இப்படி நடக்கிறது? தேவன் ஏன் இதை அனுமதிக்கிறார், இது கஷ்டம் என்று அவருக்கு தெரியாதா, தேவனுக்கு இரக்கமில்லையா** என்று கேள்விகள் பல நம்முடைய எண்ணங்களில் தோன்றும். தேவனுடைய வழிநடத்துதலை அப்படிப்பட்ட நேரங்களில் புரிந்து கொள்வதில் தடுமாற்றம் ஏற்ப்பட்டுவிடுகிறது. அப்படி நடக்கும் போது, நமக்கு ஒளஷதமாக, கொடுக்கப்பட்டிருக்கிற தேவனுடைய வார்த்தைகளிலிருந்து தான் நாம் தீர்வு காண வேண்டும்.

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலரை விடுவிக்க தேவன் முடிவெடுத்த பொழுது, அவர்களை வழிநடத்தின முறையை யாத் : 13:17–14ம் அதிகாரம் வரை உள்ள வசனப்பகுதியில் வாசிக்க முடியும். இந்த வரலாற்று நிகழ்வை தியானித்து அதிலிருந்து நமக்குத் தேவையான சில பாடங்களை கற்றுக்கொள்வோம்.

ஒரு கூட்ட ஜனத்தை அடிமைத்தனத்திலிருந்தோ அல்லது ஒரு பிடியிலிருந்தோ தப்பிக்க செய்யும் பொழுது சாதகமான வழியையும், சீக்கிரமாகத் தப்பிக்க உதவும் வழியையும் தேடுவது தான் புத்திசாலித்தனமாகத் நமக்கு தோன்றும். ஆனால், தேவன் அப்படி நினைக்கவில்லை. ஏசாயா 55–ஆம் அதிகாரம் 8,9 ஆகிய வசனங்களில் நாம் வாசிப்பது போல் என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த வசனத்திற்கேற்ப மிகவும் வித்தியாசமாக இஸ்ரவேலரை தேவன் வழிநடத்தினார்.

யாத் 13:17-18 ல் பெலிஸ்தரின் தேசவழியாய்ப் போவது சமீபமானலும், தேவன் அவர்களை அந்த வழியாய் நடத்தாமல், சிவந்த சமுத்திரத்தின் வனாந்திர வழியாய் ஜனங்களைச் சுற்றிப்போகப் பண்ணினார் என்று வாசிக்கிறோம். ஏன் அப்படி செய்தார்? பெலிஸ்தரை வீழ்த்தி சுலபமான வழியில் நடத்தியிருக்கலாமே என்று நமக்கு எண்ணத்தோன்றும். ஆனால், அது தேவனுடைய நோக்கமாயிருக்கவில்லை என்று மட்டும் புரிகிறது. சரி, இந்த முறை மட்டும் தான் தேவன் இப்படியாக வழி நடத்தினாரா என்று எண்ணிமுடிப்பதற்குள், 14-ம் அதிகாரம் ஆரம்பித்து விடுகிறது.

14-ம் அதிகாரம் 1-2 ஆகிய வசனப்பகுதியை வாசித்தால் நம்முடைய குழப்பம் சற்று அதிகரிக்கவே செய்கிறது. தேவன் என்ன அறிவுரை தருகிறார் என்று பாருங்கள். நீங்கள் திரும்பி மிக்தோலுக்கும் சமுத்திரத்துக்கும் நடுவே பாகால்செபோனுக்கு முன்பாக இருக்கிற ஈரோத் பள்ளத்தாக்கின் முன்னடியிலே பாளையமிறங்க வேண்டும். ஒரு தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து ஜனங்களை விடுவித்து, வரவழைத்து, பிறகு தப்பிப்பதற்கே ஏதுவில்லாத ஒரு இடத்தில் பாளையமிறங்கக் கட்டளை கொடுக்கிறார். ஜனங்களுக்கு முன்பாக செங்கடல், பின்புறம் அவர்கள் எகிப்தை விட்டு வெளியே வந்த அதே வழி, இருபுறமும் பள்ளதாக்கு. விடுவித்து வந்த தேவன், மீண்டும் இக்கட்டான சூழ்நிலையில் இஸ்ரவேலரை வைக்கிறார். நன்றாக நினைவில் கொள்ளுங்கள். இவை அனைத்தும் தேவன் **திட்டமிட்டு செயல்படுத்தும் காரியங்கள்.**

வசனம் 10 – ல், இஸ்ரவேல் ஜனங்கள் பார்வோன் சமீபித்து வருகிறதைப் பார்த்து, மிகவும் பயந்தார்கள் என்று வாசிக்கிறோம், பயந்து போய் என்ன செய்தார்கள்? நம்மைப்போல அவர்களும் கேள்வி தான் கேட்டார்கள். எகிப்திலே பிரேதக்குழிகள் இல்லையென்றா வனாந்திரத்தில் சாகும்படிக்கா எங்களை கொண்டு வந்தீர்? நீர் எங்களை எகிப்திலிருந்து புறப்பட பண்ணினதினால் எங்களுக்கு இப்படிச் செய்தது என்ன ? நாங்கள் எகிப்திலே இருக்கும் போது, **நாங்கள்** எகிப்தியருக்கு வேலை செய்ய எங்களைச் சும்மா விட்டுவிடும் என்று சொன்னோம் அல்லவா? நாங்கள் வனாந்திரத்திலே சாகிறதைப் பார்க்கிலும் எகிப்தியருக்கு வேலை செய்கிறது நலமாயிருக்குமே! என்று சொல்லித் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தினார்கள்.

இறுதியில் நடந்தது என்ன என்பதை அனைவரும் அறிவோம். செங்கடல் பிளவுபட்டது, தண்ணீர் மதிலாக நிற்க ஜனங்கள் தரையில் நடந்து செங்கடலைக் கடந்தார்கள். பிளந்த செங்கடல் திரும்பி ஒன்று சேர்ந்து பார்வோனுடைய இராணுவம் மூடிக்கொண்டது. அவர்களில் ஒருவனாகிலும் தப்பிக்கவில்லை (21–30).

இந்த நிகழ்விலிருந்து சில முக்கியமான பாடங்களை நாம் கற்றுக் கொள்ளமுடியும். தேவனின் வழிநடத்துதலை மனிதன் புரிந்து கொள்வது கடினம். நம் வாழ்க்கையிலும் இக்கட்டான சூழ்நிலை வரும் வேளைகளில் நம் விசுவாசம் தளர்ந்து, நம்மை சோர்வடையச் செய்துவிடும். ஆனால், தேவன் எல்லாவற்றையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்ற நம்பிக்கை வேண்டும். யாத் 14–31 ல் கர்த்தர் எகிப்தியரில் செய்த அந்த மகத் தான கிரியையை இஸ்ரவேலர் கண்டார்கள். அப்பொழுது ஜனங் கள் கர்த்தருக்கு, பயந்து கர்த்தரிடத்திலும், மோசேயினிடத்திலும், விசுவாசம் வைத்தார்கள் என்றும் 18 – ம் வசனத்தில் எகிப்தியர் நானே கர்த்தர் என்று அறிவார்கள் என்றும் வாசிக்கிறோம். ஆக தேவன் இப்படியாக இஸ்ரவேலரை வழிநடத்திக் கொண்டு வந்ததற்க்கான காரணம் I இஸ்ரவேலர் தேவனை விசுவாசிக்க வேண்டும். எகிப்தியர் தேவன் யார் என்று அறிந்துகொள்ள வேண்டும்.

நம் வாழ்க்கையிலும் நாம் சந்திக்கும் சில இக்கட்டான சூழ்நிலையை தேவன் அனுமதிக்க வாய்ப்புண்டு. அப்படித்தோன்றும் நேரங்களில் ஏன் என்றும், எதற்கு என்றும் கேள்வி கேட்காமல் விசுவாசத்தை உறுதிப்படுத்திக்கொண்டு தேவன் மீது நம்பிக்கை வைப்போமானால் அது நமக்கு நன்மையாக இருக்கும்.

எந்த ஒரு கட்டத்திலும் தேவன் இஸ்ரவேலரைக் கைவிடவில்லை பகலிலே மேகஸ்தம்பமும் இரவிலே அக்கினி ஸ்தம்பமும் அவர்களை வழிநடத்தினது செங்கடல் பிளவுபட்டது. தேவன் பார்வோனுடைய கைகளுக்கு இஸ்ரவேலரை தப்புவித்தார். அதைப்போல கடினமான பாதையில் நம்மை நடத்தினாலும் அவர் கரம் எப்போதும் நம்முடனே இருக்கிறது. ரோமர் 8:28 ல் வாசிக்கிறபடி **சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்** என்ற விசவாசமுள்ளவர்களாக நம் பக்திவாழ்வை நாம் எப்பொழுதும் முன்னெடுத்துச் செல்லவேண்டும். சரியா?

தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக! ✝

சிறுவர் பகுதி

# காணாமல் போன ஆடு

Dr. பிரெய்ஸி

**ஹ**லோ! பிள்ளைகளே, எல்லோரும் தேவனுடைய கிருபையில் சுகமாக இருப்பீர்களென நம்புகிறேன். கடந்த மாதம் நான் உங்களுக்கு சொன்னபடி, **விசுவாசத்தோடு ஜெபிப்பீர்களென** நம்புகிறேன். இந்த மாதம் லூக்கா 15:3–7 ல் இயேசு கிறிஸ்து சொன்ன காணாமல் போன ஆடு பற்றிய உவமையை உங்களுக்கு சொல்லப் போகிறேன்.

ஒரு மேய்ப்பன் நூறு ஆடுகளை உடையவனாயிருந்து அவைகளில் ஒன்று காணமற்போனால், தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்திரத்தில் விட்டு, காணாமல் போன ஆட்டைத் தேடிக்கொண்டு போவது போல, பிள்ளைகளே! நம் தேவனும் நம் தீய செயல்களால் அவரை விட்டு விலகி நாம் போகும் போதும் அல்லது தவறான நட்பில் சிக்கித் தேவனை விட்டு விலகிப் போகும் வேளையிலும் நம் தேவன் எப்படி அந்த மேய்ப்பன் தன் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் விட்டு விட்டு காணாமல் போன ஓர் ஆட்டைத் தேடி அலைகிறானோ அதுபோல், வழி தவறிப்போன நம்மையும் அன்போடு தேடி வருகிறார். லூக்கா 15:7–ல் உள்ளபடி எப்படி அந்த மேய்ப்பன் காணாமல் போன ஆட்டைக் கண்டுபிடித்தவுடனே சந்தோஷம் அடைகிறானோ அதுபோல நம் தேவனும் தவறான வழிசென்ற நாம் மனந்திருந்தி தேவனிடத்தில் திரும்பி வரும் போது மிகுந்த மகிழ்ச்சி அடைகிறார்.

ஆகையால், பிள்ளைகளே! நாமும் நம் தவறுகளுக்கும், பாவங்களுக்கும் வருந்தி தேவனிடம் மன்னிப்பு கேட்டு நீதியின் பாதைக்குத் திரும்பி தேவ பக்தியுள்ள வாழ்க்கையை நடத்த வேண்டும். அப்படிச் செய்தால், நம்மை உண்டாக்கின தேவன் நம்மைப்பற்றி மகிழ்ச்சி அடைந்து, நம்நிமித்தம் பெருமை அடைவார். நம்மை இதற்காக ஆசீர்வதிப்பார். சரியா!

அன்புடன்
பிரெய்ஸி அக்கா! ✝

## சிறுவர்களுக்கான வேத வினா ...

### லூக்கா 15-17 அதிகாரங்கள்

1. பரிசேயரும், வேதபாரகரும் இயேசுவைக் குறித்து என்ன சொன்னார்கள்?

2. அங்கே எத்தனை ஆடுகள் இருந்தது?

3. எத்தனை ஆடுகள் காணாமல் போயின?

4. காணாமற் போன ஆட்டைக் கண்டவுடன் மேய்ப்பன் என்ன செய்தான்?

5. காணாமற் போன ஆட்டைக் கண்டவுடன் எவ்வாறு மகிழ்ச்சி அடைந்தான்?

6. ஒரு பாவி மனந்திரும்பும் போது தேவன் என்ன செய்வார்?

## சோர்ந்து போகும் நேரங்களில்

- பெலனுக்காக தேவனுடைய வசனத்திற்கு திரும்ப வேண்டும் (எரேமியா 20:9)
- சங்கீதம் 73 -யை வாசித்து அங்கே சங்கீதக்காரன் சொல்வதை கற்றுக்கொள்ள வேண்டும்.
- சோதனை மூலமாகத்தான் வளர்ச்சி ஏற்படும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். (யாக்கோபு :1:24).

# கிறிஸ்து என்னும் மார்க்கம் பாடங்கள்

## தேவனால் அழைக்கப்பட்ட ஆபிரகாம்

சகோ. ஜே. ஆபகூக் ஜேம்ஸ் ராஜகுமார், சென்னை

**முன்னுரை:**

1. நோவா காலத்தில் முழு உலகத்தையும் சுத்தம் செய்த தேவன் நீதிமானாகிய நோவாவின் குடும்பத்தைக் காப்பாற்றி, அவருடைய மூன்று பிள்ளைகளான சேம், காம், யாப்பேத் என்பவர்கள் மூலம் இந்த பூமியில் சந்ததிகள் உருவாக்கி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார், [ஆதி. 6 : 10; 9 : 1].

2. நோவா முதல் ஆபிரகாம் வரை 12 தலைமுறைகள்: நோவா, சேம், அர்ப்பகசாத், காயினான், சாலா, ஏபேர், பேலேக், ரெகூ, சேரூக், நாகோர், தேரா, ஆபிரகாம் ஆகியோர்.

3. தேவன் எவ்வளவு தான் மக்களுக்கு நன்மை செய்தாலும் அவர்கள் பெருகும் போது மீண்டும் பாவத்தில் நடக்க ஆரம்பித்தார்கள்.

4. ஆகையால் முழு உலகத்தையும் தெரிந்துகொள்வதைவிட விசுவாசமானவர்களைத் தம் திட்டத்திற்காக தேவன் தெரிந்தெடுத்தார்.

I. இந்த உலகத்தை இரட்சிக்கும் மேசியா பிறந்துவரும் சந்ததி ஒரு விசுவாசமுள்ள மக்களாக இருக்கவேண்டும் என்று தேவன் திட்டமிட்டு, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஆபிரகாமைத் தெரிந்துகொண்டு அவரை அழைத்தார், [அப். 7 : 2, 3].

அ. பூர்வத்திலே அவர்கள் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும், நாகோருக்கும் தகப்பனான தேராகு என்பவன் நதிக்கு அப்புறத்திலே குடியிருந்தபோது அவர்கள் வேறே தேவர்களைச் சேவித்தார்கள், [யோசு. 24 : 2].

ஆ. அவர்களில் ஆபிராமின் இருதயத்தை தேவனுக்குமுன் உண்மையுள்ளதாகக் கண்டு, அவரைத் தெரிந்துகொண்டு, அவரை ஊர் என்னும் கல்தேயரின் பட்டணத்திலிருந்து புறப்படப்பண்ணி, அவருக்கு ஆபிரகாம் என்னும் பேரிட்டார், [நெகே. 9 : 7, 8].

இ. ஆபிரகாம் தேவன் மேல் வைத்த நம்பிக்கையினால் போகும் இடம் இன்னதென்று தெரியாமல் இருந்தும் தன் குடும்பத்தோடும் தான் வளர்த்த கால்நடைகளோடும் புறப்பட்டுப்போனார், [எபி. 11 : 8].

ஈ. அவர் தன் பயணத்திற்காக குறுக்கு வழியை தெரிந்தெடுக்க வில்லை, ஊர் என்கிற கல்தேய பட்டணத்திலிருந்து கானான் தேசம் மேற்கே ஏறக்குறைய 1500 கிலோமீட்டர்கள்.

உ. ஆனால், அந்தவழியில் தண்ணீர் வசதி இல்லாததினால் வடமேற்கே யூப்ரடீஸ் நதியோரமாக சுமார் 1200 கிலோமீட்டர் சென்று ஆரான் என்னும் ஊரிலே தங்கினார்கள், ஆதி. 11 : 31. அதே அளவு தூரம் சிரியா வழியாக நடந்து ஆரானிலிருந்து கானான் தேசம் வந்து சேர்ந்தார்.

ஊ. யூப்ரடீஸ் (தமிழில் ஐபிராத்து, நீளம் 2,,800 கிலோமீட்டர்) டைகிரீஸ் (தமிழில் இதெக்கேல், நீளம் 1, 851 கிலோமீட்டர்). இவ்விரு நதிகளுக்கும் இடையில் உள்ள பகுதி மெசொப் பொத்தாமியா (அப். 7 : 2) ஆகும். கிரேக்க மொழியின்படி இதன் அர்த்தம் இரு நதிகளுக்கு இடைப்பட்ட பகுதி என்பது ஆகும். இன்றைய காலத்தில் இந்த நதிகள் துருக்கி, சிரியா மற்றும் ஈராக் நாடுகளின் வழியாக பாய்ந்து பெர்சியன் வளைகுடாவில் கடலில் கலக்கிறது.

எ. ஆரானூரிலே (இந்தப் பட்டணம் அப்போஸ்தலர் நடபடிகளில் காரானூர் என்று சொல்லப்பட்டுள்ளது, அப். 7 : 2. அங்கு அவருடைய தகப்பனார் தேராகு மரித்தபிறகு, மீண்டும் கர்த்தர் ஆபிரகாமை கானான் தேசத்திற்கு அழைத்துக் கொண்டு போனார், ஆபிரகாமோடு அவருடைய சகோதரன் மகன் லோத்தும் சென்றார், (ஆதி. 12 : 4 ; அப். 7 : 4).

ஏ. ஆபிரகாம் தன் பிரயாணத்தில் பல தேசங்கள் பலதரப்பட்ட மக்கள், காடுகள், வயல்கள், நதிதீரங்கள், பள்ளத்தாக்குகள், மலைகள் போன்றவற்றை தைரியமாகக் கடந்துவந்தார். ஏனென்றால், தேவன் அவரோடு இருந்து அவரை அழைத்து வந்தார். அதேபோல, இந்த உலக வாழ்க்கையில் இன்றைக்கும் தேவன் நம்மோடு இருந்து நம்மை வழிநடத்துகிறார்.

**II. அங்கு தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தங்களையும், ஆசீர்வாதங்களையும் கொடுத்தார், (ஆதி. 12 : 1 – 3).**

அ. தேவன் ஆபிரகாமின் மூலம் ஆதாம் ஏவாள் நாட்களிலே கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற திட்டமிட்டார், (ஆதி. 3 : 15; 1 யோவா. 3 : 8).

ஆ. ஆபிரகாம் ஒரு பெரிய ஜாதியாகவும், நாடாகவும் பெருகுவார் என்றும் ஆபிரகாமின் பெயரை தேவன் பெருமைப்படுத்துவார் என்றும் ஆசீர்வதித்தார், (ஆதி. 12 : 2).

இ. ஆபிரகாமை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பதாகவும், சபிப்பவர்களை சபிப்பதாகவும் கூறினார், (ஆதி. 12 : 3).

ஈ. அதோடு பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆபிரகாமுக்குள் [அவர் சந்நிதிக்குள்] ஆசீர்வதிக்கப்படும் என்றார், ஆதி. 12 : 3. தேவன் இவ்வளவு பெரிய ஆசீர்வாதத்தை இந்த உலகத்தில் வேறே எந்த மனிதனுக்கும் கொடுக்கவில்லை.

உ. இவ்வளவு பெரிய ஆசீர்வாதத்தைப் பெறும்போது ஆபிரகாம் ஒரு பரதீசியாய் கூடாரங்களிலே குடியிருந்தார், இந்த உலகத்திற்கு இரட்சிப்பு வருவதற்காக [மேசியாவுக்காக] ஆபிரகாம் தன் வாழ்க்கையை அற்பணித்தார்.

ஊ. தேவ கட்டளைக்கு கீழ்ப்படிந்து கஷ்டங்களை விசுவாசத்தோடு ஏற்றுக்கொண்டார். நாம் இந்த உலகத்திலே நிரந்தரமற்ற கூடாரங்களிலே பரதேசியான உலகத்திலே வாழுகிறவர்களாயிருக்கிறோம், [2 கொரி. 5 : 1 – 9].

எ. ஆபிரகாம் கானான் தேசத்தில் வெவ்வேறு இடங்களுக்கு பிரயாணம் செய்தாலும் சென்ற இடமெல்லாம் தேவனை மறவாமல், அவருக்கு பலிபீடம் கட்டி அவருடைய நாமத்தைத் தொழுது கொண்டார், [ஆதி. 12 : 7, 8 ; 13 : 4].

**III. கானானில் அவர்கள் அதிகமாக பெருகினதால் ஆபிரகாம் லோத்தும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து போனார்கள், ஆதி. 13:6.**

அ. ஆபிரகாமும் லோத்தும் சண்டையிடவில்லை; அவர்களுடைய வேலைக்காரர் சண்டையிட்டுக் கொண்டார்கள், [ஆதி. 13 : 7].

ஆ. அந்த சூழ்நிலையிலும் ஒரு தகப்பனாக [சித்தப்பாவாக] ஆபிரகாம் வயதில் பெரியவராக இருந்தாலும் தெரிந்துகொள்ளும் உரிமையை தன் சகோதரன் குமாரன் லோத்துவுக்கே விட்டுக்கொடுத்தார், ஆதி. 13 : 8, 9 ; பிலி. 2 : 3 – 4.

இ. லோத்து யோர்தான் நதிக்கு அருகான செழுமையான பூமியைத் தெரிந்து கொண்டார், ஆதி. 13 : 10. பூமிக்குரிய செழுமை அநேக நேரங்களில் அவபக்தியையும் , பொல்லாப்பையையும் கொண்டுவருகிறது, [ஆதி. 13 : 11 – 13].

ஈ. இதனால், லோத்து நீதிமானாக வாழ்ந்தாலும் தேவனுடைய பாதுகாப்பையும் ஆசீர்வாதத்தையும் ஆபிரகாமையும் அவருடைய அரவணைப்பையும் இழந்துபோனார், [2 பேது. 2 : 8].

உ. லோத்து சென்ற பிறகு தேவன் ஆபிரகாமை இன்னும் அதிகமாக ஆசீர்வதித்தார், [ஆதி. 13 : 14 – 17].

IV. **ஆபிரகாமை விட்டு பிரிந்த லோத்து பிறகு சில பெரிய பிரச்சனைகளில் சிக்கிக் கொண்டார், ஆதி. 14 : 11, 12.**

அ. லோத்து தெரிந்துகொண்ட யோர்தான் பள்ளத்தாக்கில் இருந்த சோதோம் கொமோரா பட்டணங்கள் செழுமையாக இருந்தாலும், அந்த மக்கள் தெய்வ பயமில்லாமல் அதிகமான பாவத்தில் வாழ்ந்தார்கள், [ஆதி. 13 : 13 ; லூக். 17 : 28, 29 ; ரோம. 3 : 18 ; சங். 36 : 1].

ஆ. லோத்து குடியிருந்த சோதோம் கொமோரா ராஜாக்கள் வரி கட்டாததற்காக போர் உண்டானது, [ஆதி. 14 : 1 – 5].

இ. பாதுகாப்பின்றி விடப்பட்ட லோத்து ராஜாக்களுடைய போரில் தன்னையும் தன் குடும்பத்தையும் பொருள்களையும் இழந்து விட்டார், ஆதி. 14 : 11, 12.

ஈ. தப்பியோடிய மனிதன் மூலம் இந்தச் செய்தி ஆபிரகாமுக்குக் கிடைத்தது, ஆதி. 14 : 13, 14. கர்த்தர் ஆபிரகாமைக் கொண்டு லோத்துக்கு உதவி செய்தார்.

உ. ஆபிரகாம் கர்த்தரின் துணையோடு வெறும் 318 நபர்களைக் கொண்டு மொத்தம் 9 ராஜாக்களை எதிர்கொண்டு அவர்கள்மேல் வெற்றிகொண்டு எல்லாவற்றையும் மீட்டார், [ஆதி. 14 : 15, 16 ; அப். 18 : 10 ; உபா. 28 : 7].

ஊ. தேவன் ஆபிரகாமை ராஜாவாகவும் ஆசாரியனாகவும் இருந்த மெல்கிசேதேக்கின் மூலம் ஆசீர்வதித்தார், ஆபிரகாம் நன்றியாக ஆசாரியனுக்கு தசமபாகம் கொடுத்தார், [ஆதி. 14 : 17 – 20].

எ. ஆபிரகாம் அநேக கொள்ளைப் பொருளைப் பெற்றுக் கொள்ள உரிமை இருந்தும் தேவன்மேல் நம்பிக்கைவைத்து அதில் கொஞ்சம்கூட எடுத்துக் கொள்ளவில்லை, [ஆதி. 14 : 21 – 23]. தேவன் கொடுத்தது போதும் என்று எண்ணினார், [1 தீமோ. 6 : 6 – 8].

**முடிவுரை:**

1. தேவன் ஆபிரகாமை இவ்வளவாக ஆசீர்வதித்தார் ஏனென்றால் ஆபிரகாம் தேவனுடைய நோக்கத்திலும் திட்டத்திலும் தேவனோடு பங்காளியாக நடந்தார், [ரோம. 4 : 13 ; எபி . 11 : 8 – 10, 15, 16].

2. இன்றைக்கு நாம் தேவ ஊழியத்தில் பங்காளிகளாக இருக்க வேண்டும், (மத். 28 : 18 – 20; மாற். 16 : 15, 16; லூக். 24 : 47; 1 கொரி. 9 : 23; எபே. 3 : 3; 1 பேது. 4 : 13).

3. லோத்தைப் போல தேவ பாதுகாப்பையும் கிறிஸ்துவின் ஐக்கியத்தையும் விட்டுவிடுவோமானால் நாம் மிகப்பெரிய பிரச்சனைகளில் சிக்கிக்கொண்டு, ஆத்தும ஜீவனை இழந்து விடுவோம், (மாற். 8 : 35; கொலோ. 2 : 19; 2 யோவா. 1 : 8).

4. தேவன் உங்களையும் உங்களைச் சார்ந்தவர்களையும் கிறிஸ்து இயேசுவுக்குள் காத்துக்கொள்வாராக, ஆபிரகாமை ஆசீர்வதித்த தேவன் உங்களையும் ஆசீர்வதிப்பாராக! தொடர்ந்து விசுவாசிகளின் தகப்பன் ஆபிரகாமைப் பற்றி அடுத்த பாடத்தில் கவனிக்கலாம்.

## கிறிஸ்துவின் போதனைகள் ஏன் தாக்கத்தை ஏற்படுத்தியது?

- ☆ அவர் வெளிப்படையாகப் பேசினார் (மத்தேயு 4:19, யோவான் 4:14)
- ☆ அவர் இரக்கமும், மனதுருக்கமும் நிறைந்தவராய் பேசினார் (மாற்கு 8:2)
- ☆ அவர் பட்சபாதமில்லாதவராக இருந்தார் (மத்தேயு 19:14: மாற்கு 10:21)
- ☆ அவர் மனிதத் தேவைகளைச் சந்தித்தார் ( யோவான் 9:1,38)
- ☆ ஜனங்கள் கேட்டறியும் திராணிக்குத் தக்கதாய் போதித்தார் (மாற்கு 4:13)
- ☆ அவருடைய வார்த்தைக்கும், வாழ்க்கைக்கும் தொடர்பு இருந்தது ( யோவான் 8:29,46) எபிரெயர் 4:15).

## நாம் எங்கே உட்காரக்கூடாது

சகோ. பாண்டியன்

முதலில் தேவன் நம்மை எங்கு உட்கார வைத்திருக்கிறார் என்று பார்க்கலாமா? பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்ட நம்மை கிறிஸ்துவுடனே எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேக்கூட உட்காரவும் செய்தார் என்று எபே. 2:5–7–ல் காண்கிறோம். உன்னதங்கள் என்ற வார்த்தைக்கு, பரலோகம் மிகச்சிறந்த இடம், தேவனுடைய வாசஸ்தலம் என்று அநேகப் பொருள் கொள்ளலாம். மொத்தத்தில் அதைவிட உயர்ந்த இடம் வேறு எங்கும் இல்லை என்னலாம். அப்படிப்பட்ட கிறிஸ்துவின் ராஜ்ஜியமாகிய சபையில் உட்காரச் செய்திருக்கிற பிதாவை நாம் ஸ்தோத்தரித்து நன்றி தெரிவிக்கவே சபைக் கூடி வருகிறோம் (கொலே. 1:13) ஆக, நாம் வாரம் தோறும் ஆண்டவர் இயேசுவுடனே உட்கார்ந்து தேவனை மகிமைப் படுத்தும் சிலாக்கியத்தைப் பெற்று இருக்கிறோம் (மத். 18:20; எபி. 2:22). இப்படி உயர்ந்த அந்தஸ்தை பெற்றிருக்கிற நாம் கண்ட இடங்களில் உட்காரக்கூடாது என்ற தேவ ஆலோசனையை பார்ப்போம்.

முதலாவது, பரியாசக்காரர் உட்காருமிடத்தில் உட்காரக்கூடாது என்று சங். வாசிக்கின்றோம். இந்த உலகம் பாவத்தைக் குறித்து பரியாசம் பண்ணுகிறது. பாவம் ஆபத்தானது, 1:1,2–60 நரகத்திற்கு ஏதுவானது என்று சொல்லுகிற நம்மையும் கேலி செய்கிறது. உலகத்தில் மெஜாரிட்டியாக இருக்கிற அவர்களைக் கண்டு நாம் பயப்படவோ, அவர்களோடே ஒத்துப் போகவோக் கூடாது. ஏனெனில், விபச்சாரம், பாவம் உள்ள இந்தச் சந்ததியில் என்னைக் குறித்தும், என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுவானோ அவனைக் குறித்து வருகையில் நானும் வெட்கப்படுவதாக இயேசு கூறுகிறார் (மாற்கு 8:38). எரேமியா தீர்க்கதரிசி யூதா ஜனங்களின் சிறை பிடிப்பை முன்னறிவித்த போது ஒருவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதைக் குறித்து எரேமியா சொல்லும்போது உம்முடைய வார்த்தைகளே எனக்குச் சந்தோஷம்; நான் பரிகாசக்காரருடைய கூட்டத்தில் உட்கார்ந்து களி கூரவில்லை, தனித்து உட்கார்ந்தேன், சலிப்பினால் என்னை நிரப்பினீர் என்கிறார் (எரே. 15:16,17).

இரண்டாவதாக, வீணரோடே நாம் உட்காரக் கூடாது சங். 26:4,5 தாவீது ராஜாவாக இருந்த போதிலும் களியாட்டங்களில் ஈடுபாடு கொள்ளாமல், தேவனுடைய ஆலயத்தையே வாஞ்சிக்கிறேன் என்கிறார் சங். 84:10. இன்றும் நம் காலங்களில் ஒரே வேதாகமம் இருந்தும், அநேகர் வேற்றுமையான உபதேசங்களையும், பக்தி

விருத்திக்கு ஏதுவாயிராமல் – வாக்குவாதங்களும், கட்டுக்கதை களையும் போதித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், கிறிஸ்துவின் உபதேசத்தில் முக்கியமான சுத்த இருதயம், நல் மனசாட்சி, மாயமற்ற விசுவாசத்தால் உண்டாகும் அன்பை மதிக்காமல் வீண் பேச்சுக்கு இடம் கொடுத்து சபையை விட்டு விலகிப் போனார்கள் என்கிறார் பவுல் (1 தீமோ. 1:3–6). அதனால் தான் விசுவாசிக்கும், அவிசுவாசிக்கும் சம்பந்தமில்லை என்கிறது வேதம்.

மூன்றாவதாக, பெருமையான இடங்களில் உட்கார ஆசைப்படக் கூடாது (லூக். 14:8–10) மற்றவர் மத்தியில் நாம் அவமானப்படக் கூடாது என்கிற ஒரு தகப்பனின் அன்பை இயேசு வெளிப்படுத்தி யிருக்கிறார். அதாவது, ஒருவரால் நாம் அழைக்கப்பட்டு இருக்கும் போது தன்மை ஆசனத்தை தவிர்க்கும் போது தானாக உனக்கு மேன்மை தேடி வரும் என்றார். அதே போல நம் பேச்சிலும் பரிசேயரைப் போல தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளக்கூடாது என நம் எஜமான் எடுத்துக்க காண்பித்தார். அவரே நம் தாழ்மைக்கு மிகச்சிறந்த முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டினார். தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்பது இயேசுவின் தலை சிறந்த போதனைகளில் ஒன்று என்றால் அது மிகையாகாது.

நான்காவதாக, சபையில் நாம் மாய்மாலம் பண்ணுகிறவர்களாக உட்காரக் கூடாது (எசேக். 33:31). தீர்க்கதரிசியாகிய எசேக்கியேல் காலத்தில் ஜனங்கள் அந்நிய தெய்வங்களை நாடிக் கர்த்தரை அசட்டைப்பண்ணிக் கொண்டிருந்தார்கள். அதைக் குறித்து தேவன் கூறும்போது ஜனங்கள் வழக்கப்படி உட்கார்ந்து, வார்த்தைகளைக் கேட்கிறார்கள்; ஆனாலும், அவைகளின்படி செய்கிறதில்லை; தம் வாயினால் இன்பமாக பேசுகிறார்கள். ஆனால், அவர்கள் இருதயமோ பொருளாசையைப் பின்பற்றி போகிறது என்றார். எனக்கன்பானவர்களே, நாம் ஏதோ கடமைக்கென்று சபைக் கூடி வராமல் தேவ சமூகத்தில் கூடி வருகிறோம். தேவ ஆலோசனை எனக்கு தரப்படுகிறது என்கிற வாஞ்சையுடன் சபைக் கூடி வரவேண்டும் 119ம் சங்கீதத்தில் 20,40,81ம் வசனங்கள் இதை நமக்கு நினைவூட்டுகிறது. சபையில் நம் சிந்தனை சிதறவிடாமல் வீண் சிந்தனைகளை வெறுத்து வேதத்தில் பிரியப்படுகிறவர்களாய் காணப்பட வேண்டும். வசனத்தின்படி நடக்க பிரயாசப்பட வேண்டும் (யாக். 1:22–25).

இறுதியாக, உன் சகோதரனுக்கு விரோதமாக பேச உட்காரக்கூடாது (சங். 50:20) அநேகர் இதைப் போன்ற காரியங்களில் தான் உற்சாகம் காண்பிக்கிறார்கள். சபை மக்களே இப்படியிருக்க லாகாது. மற்றவர்களை குற்றவாளிகள் என்று தீர்க்காதிருங்கள் என்பது இயேசுவின் முக்கியப் போதனைகளில் ஒன்று. ஆனால், சில

நூதன சீஷர்கள் இதை மதியாமல் கூட்டம் கூடி சகோதரர்களுக்கு விரோதமாக பேசி மகிழுகிறார்கள், 'வளர்ந்து வரும் விசுவாசிகளைப் பார்த்து, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் நான் மறுபடியும் கர்ப்ப வேதனைப்படுகிறேன்' என்கிறார் பவுல் (கலா. 4:19). நம் இருதயத்தில் கசப்பான வைராக்கியம் விரோதம், பெருமையும் இருக்குமானால் அது ஜென்ம சுபாவம் (யாத். 3:15) ஒருவருக்கு ஒருவர் தயவாய் / மன உருக்கமாய் கிறிஸ்துவுக்குள் தேவன் மன்னித்தது போல மன்னிப்பதே தெய்வீக சுபாவம் (எபே. 4:31,32). அந்த சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாக மாறவே வாக்குத்தத்தங்கள் நமக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது (2 பேதுரு 1:4)

தேவன் நம்மை கிறிஸ்துவுடன் எழுப்பி உன்னதங்களில் உட்கார வைத்து இருப்பதால், பூமிக்குரியவர்களை அல்ல மேலானவை களையே நாடுவோம். நம் உட்காருதலையும், எழுந்திருக்குதலையும் அறிந்த தேவனுக்கே பிரியமாக வாழ்வோம். தேவக் கிருபை நம் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்!!

✝

## கொரிந்து பட்டணம்

- *கிரேக்க தேசத்திலிருந்த ஒரு துறைமுகப் பட்டணம். வாணிகமும், கிரேக்க நாகரீகமும் இங்கு செழித்தோங்கி யிருந்தது.*
- *வடக்கு கிரேக்க தேசத்தையும், தெற்கே இருக்கிற பெலோபென்சி பகுதியையும் இது இணைக்கிறது.*
- *இணைக்கும் இப்பகுதி 4 மைல்கள் அகலம் கொண்டது. இந்த பகுதியில் தான் கொரிந்தியர் பட்டணம் உள்ளது.*
- *இப்படியோர் முக்கிய இடத்தில் அமைந்ததால் வாணிபக் கேந்திரமாக திகழ்ந்தது. பவுலின் நாட்களில் சுமார் நாலு லட்சம் பேர் இங்கு வசித்துள்ளனர்.*

# நீ விசுவாசித்தால்...

**K.M. பிலிப் பவானி**

**அ**ன்பான திருமறை ஆசான் வாசகர்கள் யாவருக்கும் மீட்பர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். நீ யார்? என்ற கேள்விக்கு – நான் கிறிஸ்தவன், நான் விசுவாசி என்ற பதில்கள் கிடைக்கும். ஆம், நான் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதால் நான் கிறிஸ்தவன். அதுபோலவே, நான் 1.பிதாவாகிய தேவன் ஒருவர் உண்டென்றும் (யாக். 2:19), 2. இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனென்றும் (மத். 16:16), 3. வேத வசனங்கள் தேவனுடையது என்றும் (119:66) விசுவாசிக்கிறபடியால் நான் விசுவாசி. இதே பண்புகளை ஒரு நபர் – அவன் பின்னால் ஒரு கூட்டம் உலகில் சுற்றி வருகிறது. அவர்களை நாம் விசுவாசிகளாய் ஏற்றுக்கொள்ள முடியுமா? இதைக் குறித்து யாக், 2:19–ல் 'தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது நல்லது தான்; பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன' என்று குறிப்பிடுகிறார். அப்படி யென்றால் பிசாசு விசுவாசியா? லூக். 4:41–ல் பிசாசுகளும் நீர் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று சத்தமிட்டது என்று பார்க்கிறோம். அப்படியானால் உண்மையான விசுவாசிகளில் சாத்தானுக்கும் இடமுண்டா? உண்மையான விசுவாசியை வேதம் அடையாளப்படுத்துகிறதை கவனியுங்கள். வீணான மனுசனே கிரியையில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறிய வேண்டுமோ? ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளி னாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்றும் நீங்கள் காண்கிறீர்கள் (யாக். 2:20,24) என்கிறார். ஆம், தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும். இக்கிரியை மூலமே விசுவாசம் கணக்கிடப்படுகிறது. ஆனால், பிசாசு ஒருபோதும் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப் படிவதில்லை. ஆகவே, பிசாசு ஒருபோதும் விசுவாசி அல்ல.

இப்பொழுது விசுவாசிகளின் தகப்பனான ஆபிரகாமின் சரித்திரத்திலிருந்து உண்மையான விசுவாசியைப் புரிந்து கொள்வோம். தேவன் ஆபிரகாமை சோதிக்கும்படி ஆபிரகாமை நோக்கி, 'உன் நேசகுமாரனாகிய ஈசாக்கை தகனபலியாக பலியிடு' என்றார். உடனே ஆபிரகாம் ஈசாக்கை பலியிட இரவிலேயே ஆயத்தப்பட்டு அதிகாலமே எழுந்து புறப்பட்டான். ஆபிரகாம் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிவதில் ஆயத்தம் மட்டுமல்ல உடனே அதிகாலையில் புறப்பட்டான். அன்பானவர்களே! விசுவாசிகளாகிய நாம் சபை கூடி வருவதில் எவ்விதம் கீழ்ப்படிகிறோம்? ஆயத்தத்தோடு குறித்த நேரத்தில் சரியாய் சபை கூடி வருகிறோமா? சாக்குப் போக்கு சொல்லி சபை கூடி வருதலை அசட்டையாய் தவிர்த்து விடுகிறோமா? மேலும்,

மோரியா தேசத்து மலைக்கு செல்ல மூன்று நாள் பயணம் மேற்கொண்டதில், கூடவே நேசகுமாரனும் வருவதில் ஆபிரகாமின் மனித உள்ளம் பாசத்தால் எவ்வளவு தடுமாறியிருக்கும்; ஒருவேளை திரும்பிச்சென்று விடவும் கூட முடிவெடுத்திருக்கலாம். ஆனால், ஆபிரகாமின் விசுவாச கிரியை அதற்கெல்லாம் இடம் கொடுக்கவே இல்லை. உறுதியாய் பயணத்தை மேற்கொண்டான். ஆம், தேவனுக்கென்று (சபைக்கென்று) செயலாற்ற முடிவு செய்திருப்பீர்களானால் அதில் உறுதியாய் நிலைத்திருங்கள். கிரியையின் பலனை உங்கள் வாழ்வில் அனுபவிப்பீர்கள். ஆபிரகாம் பயணத்தில் தன் வேலைக்காரரை ஓரிடத்தில் நிறுத்தினான். அவர்களிடம் நானும் பிள்ளையாண்டானும். திரும்பி வருவோம் என்றும் தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே? என்ற ஈசாக்கின் கேள்விக்கு எவ்வித பதட்டம் இன்றி தேவன் பார்த்துக்கொள்வார் என்ற ஆபிரகாமின் பதிலும் ஆபிரகாமின் விசுவாச அறிக்கையை தெளிவாக வெளிப்படுத்துகிறது. ஈசாக்கு பிறக்குமுன்பே தேவன் ஆபிரகாமிடம், சாராள் பெறப்போகும் ஈசாக்குக்கும் அவனுக்குப் பின்வரும் சந்ததிக்கும் நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன் என்ற இந்த வாக்குத்தத்தத்தை (ஆதி. 17:19) விசுவாச அறிக்கையாக வெளிப்படுத்தினான். இந்த விசுவாசம் வெறும் பேச்சல்ல கிரியையில் காண்கிறோம். ஆபிரகாம் தேவன் குறித்த இடத்தில் பலிசெலுத்த கட்டைகளை அடுக்கிய பின், ஈசாக்கைக் கட்டி கட்டைகளின் மேல் கிடத்தினார்கள். தன் குமாரனை பலி செலுத்த கையை நீட்டி கத்தியை எடுத்தான். இது எதைக் காட்டுகிறது. எல்லாம் முடிந்தது என்பது தானே. ஆனால், தேவன் ஆபிரகாமின் விசுவாசத்தை கனப்படுத்தினார். தேவன் ஆபிரகாமை கூப்பிட்டு பிள்ளையாண்டான் மேல் உன் கையை போடாதே என்று சொல்லி அதே ஈசாக்கை உயிரோடே ஆபிரகாமிடம் ஒப்படைத்தார். ஆம் நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்பதை ஆபிரகாம் ருசித்தான். ஆகவே, தான் ஆபிரகாம் விசுவாசிகளின் தந்தை என்று இன்றும் பெருமையோடு அழைக்கப்படுகிறார். ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததி இன்றும் உலகமெங்கும் வியாபித்திருக்கிறது. அன்பான விசுவாசியே! நீ விசுவாசித்தால் உன் விசுவாசத்தை தேவன் கனப்படுத்துவார்.

இப்படி தேவனுக்குக் கீழ்ப்படிவதில்தான் பிசாசு தோற்றுப் போகிறான். அவன் விசுவாசியல்ல. நாமோ, சுவிசேஷத்தை கேட்டு மனந்திரும்பி கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்று சபையில் இருக்கிறோம். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் (1 யோவான் 5:4). விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் (எபி. 11:6) அவர் தம்மை தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறார். இந்த விசுவாசம் நமக்குள் பெருகுமானால் நம் வாழ்க்கையில் பயம், கலக்கம் தோல்வி இருக்காது.

இதற்குரிய ஒரு வரலாற்றுப் பகுதியை 2 இராஜா. 5:8–23 பகுதியில் பார்ப்போம். இஸ்ரவேல் ராஜாவுக்கு எல்லாவிதத்திலும் துணையாயிருக்கிற எலிசாவை பிடிக்கும்படி, சீரிய இராஜாவால் அனுப்பப்பட்ட இராணுவம் இரவோடு இரவாக தோத்தானில் மலைமேல் தங்கியிருக்கிற எலிசாவை பிடிக்க மலையை சுற்றி வளைந்து கொண்டார்கள். அதிகாலையில் எழுந்த எலிசாவும், கேயாசியும் கூடாரத்தை விட்டு வெளியே வந்தார்கள். மலையைச் சுற்றி நிற்கிற இராணுவத்தைக் கேயாசி பயந்து, நடுங்கி, கலங்கி இனி நாம் என்ன செய்வோம் என்று கதறினான். ஆனால், எலிசாவோ, அவர்களோடிருப்பவர்களை பார்க்கிலும் நம்மோடிருப்பவர்கள் அதிகம் என்றான். காரணம் அவனுடைய விசுவாசக் கண்களில், எலிசாவை சுற்றிலும் அக்கினி மயமான குதிரைகளாலும், இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதைக் கண்டான். இதை கேயாசியும் பார்க்கும்படி, எலிசா கண்களை மூடி ஜெபித்தான். உடனே கர்த்தர் கேயாசி கண்களைத் திறந்தார். மலைமேல் உள்ள தேவசேனையை பார்த்து தைரியம் அடைந்தான். பயம் நீங்கிற்று. அன்பான விசுவாசிகளே! முதலில் நாம் தைரியப்பட வேண்டும். அதேபோல் நம்மைச் சுற்றிலும் இருக்கிறவர்களுடைய விசுவாசம் பெருக நம் கண்களை மூடி தேவனிடத்தில் விண்ணப்பம் செய்கிறவர்களாயிருக்க வேண்டும். நம்முடைய ஜெபம், மற்றவர்களது கண்களைத் திறந்து பயத்தை, கலக்கத்தை நீக்கி சமாதானத்தை கொடுக்க வேண்டும். அவர்களும் விசுவாசிகளாய் மாற இயன்றதைச் செய்வோம்.

எலிசா எப்பொழுதும் தன் விசுவாசக் கண்களோடேயே நோக்கியதால் அவன் மட்டுமல்லாமல் அவனைச் சார்ந்தவர்களும் சமாதானம், திருப்தி அடைந்தார்கள். 2 இராஜா. 4:1–7 ல் இவ் வரலாற்றில் தீர்க்கதரிசிகளுடைய புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாய் இருந்தவள் தன் குறைகளை, பிரச்சனைகளை எலிசாவிடம் தெரிவித்தாள். அதற்கு எலிசா அவளை நோக்கி உன்னிடத்தில் என்ன இருக்கிறது? என்றான். அவளோ 'ஒரு குடம் எண்ணெய் இல்லாமல் வேறொன்றுமில்லை' என்றாள். அப்பொழுது எலிசா நீ போய் உன் அயலாரிடத்தில் அநேகம் வெறும் பாத்திரங்களை வாங்கி வந்து வீட்டிற்குள் போய் குடம் எண்ணெயை காலிப் பாத்திரங்கள் எல்லாவற்றிலும் ஊற்றி நிரப்பு என்றான். காரணம் அவளுக்கு ஒரு குடம் எண்ணெய்தான் தெரிந்தது. ஆனால், விசுவாசக் கண்களுடைய எலிசாவுக்கோ அந்த ஒரு குடம் எண்ணெயில் அநேக பாத்திரங்கள் நிரம்பக்கூடிய எண்ணெய் இருப்பதைக் கண்டான். எலிசா கண்டதைப் போலவே காலிப்பாத்திரங்கள் எல்லாம் நிரம்பிற்று. அவள் அதனை விற்று தனக்கிருந்த கடன்களை அடைத்தாள், மீந்ததை வைத்து பிள்ளைகளோடு திருப்தியாய் சமாதானமாய் வாழ்ந்தாள்.

பிரியமானவர்களே! நம்முடைய விசுவாச ஜெபம் நம்மைச் சார்ந்தவர்களுக்கு திருப்தியையும், சமாதானத்தையும் கொடுக்க வேண்டும். அந்த அளவுக்கு நம் விசுவாசம் உறுதியாயிருக்க வேண்டும். ஆதித்திருச்சபையார் ஒருமனப்பட்டவர்களாய் ஒன்று கூடி சிறைச் சாலையில் அடைக்கப்பட்டுள்ள பேதுருவுக்காக ஜெபித்தார்கள். உடனே பேதுருவின் கை, கால்களில் போடப்பட்ட விலங்குகள் உடைக்கப்பட்டன. கட்டுகள் கழன்றன. சிறைச்சாலைக் கதவுகள் திறந்து பேதுருவுக்கு வழி கொடுத்தது. பேதுரு தனக்காக ஜெபித்த அந்த சபையாருக்கு முன்பாக ஜெய வீரராய் நின்றார் (அப். 12:1–17).

பிரியமானவர்களே! நம்முடைய ஆவி, ஆத்துமா சரீரத்தில் விசுவாசம் கிரியை செய்யட்டும். கர்த்தர் எனக்காக யாவற்றையும் செய்து முடிப்பார் (சங். 138:8) என்று நம் இருதயம் சொல்லட்டும். என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்கு பெலனுண்டு என்று (பிலி. 4:13) நம் வாய் அறிக்கை யிடட்டும். விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிறவருமா யிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம் (எபி. 12:1). பிதாவாகிய தேவன் குமாரன் மூலம் நம் விசுவாசத்தை கனப்படுத்துவாராக. நாம் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்போம். ஆமென்!!!

✝

## பாவம் என்பது என்ன?

நியாயப் பிரமாணத்தை மீறுவது பாவம் (1யோவான் 3:4)

பொல்லாத சிந்தனைகள் பாவம் (1யோவான் 3:15)

தீய வார்த்தைகள் பேசுவது பாவம் (மத்தேயு 5:35-37; யாக்கோபு 3:5-8)

தவறான கிரியைகள் செய்வது பாவம் (கலாத்தியர் 5:19-21)

நன்மை செய்ய அறிந்தும் செய்யாமலிருப்பதும் பாவம் (யாக்கோபு 4:17)

# 26 – ம் வேதாகமக் கருத்தரங்கின் கருத்தாளர்கள்



சகோ . E.Z.S. ராஜநாயகம்



சகோ . கா.தீமோன் ஸ்ரீதர்



சகோ . அரசு




சகோ . E.Z.S. ரபி நாயகம்



சகோ . தேவப்பிரியம்



சகோ . K. பாண்டியன்



சகோ . வில்லியம்ஸ்




சகோ . ஜேம்ஸ் ராஜகுமார்



சகோ . S. மனுவேல்



சகோ . ஆனந்தராஜ்

"Registered" with RNI No: TNTAM/2006/20466
Postal regn. No. Erode/26/2021 - 2023
Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023
Published on 17/18 th of Every Month
Posted at Erode HPO on 20/21 of Every Month.

# 26 – ம் வேதாகமக் கருத்தரங்கில் புதிய நூல்கள் வெளியீட்டின் போது...









**வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில்**
**ஒரு புதிய அத்தியாயம்**

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு
இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

**திருமறை தியானம்**

**நம்பிக்கை** தொலைக்காட்சியில்

| | |
|---|---|
| செவ்வாய் | காலை 6:30 - 7:00 மணி |
| வெள்ளி | காலை 7.30 - 8.00 மணி |

To:

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.